# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 34 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 34


## ஊழியத்தின் அழைப்பு

சேவை செய்ய அழைக்கப்படுகிற விசுவாசமுள்ள ஊழியர்கள் இன்றைக்கு தேவை. லௌகீக மற்றும் ஆவிக்குரிய தேவைகளை உடைய ஜனங்களை பெருமளவில் சந்திக்க இன்று ஊழியர்கள் தேவை. ஆலயத்தைப் பராமரித்து சுத்தம் செய்வது , காணிக்கைகளை வசூலிப்பது ,காணிக்கைகளை மற்ற ஊழியங்களுக்கும், தேவைகளுக்கும், பிரித்து வைப்பது, கூட்டங்களை ஒழுங்குப்படுத்தி நடத்துவது, சுகவீனம் உள்ளவர்களை சந்தித்து ஜெபிப்பது , ஏழைகளுக்கு உதவி செய்வது என்று ஊழியர் களுடைய பொறுப்புகள் அதிகம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இந்தப் பொறுப்புகளை பூரணமாய் விசுவாசமும் நம்பிக்கையும் உடையவர்களாய் செய்ய நிலையான ஊழியர்கள் தேவை.

விசுவாசமுள்ள சபை ஊழியரும், ஊழியமுமே ஜனங்களின் நல்வாழ்வு மற்றும் கர்த்தருக்குள் வாழும் நீண்ட நாட்களை அளவிடும் கருவியாக அமைகிறது. உலக சம்பந்தமான காரியங்களும், ஆவிக்குரிய இளைப்பாறுதலும் பல சபைகளில் இன்று ஊழியத்தின் பாரமாக மாறிவிட்டது. ஊழியமும் சபையும் உலகப்பிரகாரமான காரியங் களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்குமேயானால், ஆவிக்குரிய காரியங்களில் அதிக கவனம் செலுத்த முடியாது. ஆகவே ஒவ்வொரு சபை விசுவாசியும் தங்களை தேவனுக்கு பணிவிடைக்காரர்களாக அர்ப்பணித்துக் கொள்வது அவர்களது கடமை மாத்திரமல்ல, அவர்களின் தனிச்சுதந்திரமும் கூட. சேவை செய்வதற்கு முன் உதாரணமாக கிறிஸ்துவின் வாழ்வே நமக்கு சாட்சி .மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற்கு 10: 45).
எப்படி ஒரு வீட்டை பராமரித்து நிர்வாகம் பண்ணுகிறோமோ, அதுபோலவே சபையையும் பராமரிக்க வேண்டும். சபையின் அடிப்படைத் தேவைகள் சில சமயம் சந்திக்கப்படாவிட்டாலும் கூட அதுவும் சுவிசேஷத்திற்கு தடையாக மாறி விடும். சபையின் வளர்ச்சிக்காக சிறியோர் முதல் பெரியோர் வரை அவரவர் தங்களால் முடிந்தவரை பணிவிடை செய்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை சேவிப்பது எவ்வளவு ஆச்சரியமும் ஆசீர்வாதமுமாகும்.சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டு, நிர்வகிக் கப்படும் சபை இந்த உலகத் திற்கு சாட்சி. 1 கொரி 4: 2 ல் உக்கிராணக்காரன் உண்மை யுள்ளவன் என்று காணப் படுவது அவனுக்கு அவசியமாம்.



தேவன் தம்முடைய ஜனங்களுக்கு சுவிசேஷ பொறுப்பை ஒப்படைத்ததோடல்லாமல், மற்றவர் களுடைய தேவைகளுக்கு உதவுபவர்களாகவும் இருக்க வேண்டும். எப்போதாவது தன்னார்வலர் களாய் பணி செய்வது எளிது. ஆனால் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல், மாதந்தோறும் சபைகாரியங்களில் பங்கேற்பது என்பது மிகவும் வரவேற்கத்தக்கது. தேவனால் அழைக்கப்பட்ட பரிசுத்தவான்கள் கர்த்தருக்குப் பணிவிடைக்காரர்கள் மனுஷ தயவைக் காட்டிலும் தேவ தயவே மேன்மையானது. மனுஷரைப் பிரியப்படுத்த நாடாமல், தாம் சேவை செய்யும் கர்த்தருக்குப் பிரியமாய் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

சபையின் நிர்வாகத்திற் கென்று அபிஷேகிக்கப்பட்டு, பொறுப்புகளை வகிக்கும் சபை ஊழியர், சபை செயலாளர், பொருளாளர், ஞாயிறு பாடசாலை ஆசிரியர் குழுவினர் , சிறப்பு பாடகர்கள், சமையல்காரர், வாயிற்காவலர், சபை உறுப்பினர்கள் ஆகிய அனைவரும் சபையின் தேவைகளை பூர்த்தி செய்கிறவர்களாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான சபை என்பது நம்பகமான சேவை மற்றும் தடையில்லா சுவிசேஷம் அறிவிப்பதாக அமைவதே ஆகும்.தேவன் தம்முடைய ஜனங்களை பலவித வரங்களினாலும் ஞானத்தினாலும் நிரப்புவார் .

**விசுவாசமுள்ள சபை ஊழியரும், ஊழியமுமே ஜனங்களின் நல்வாழ்வு மற்றும் கர்த்தருக்குள் வாழும் நீண்ட நாட்களை அளவிடும் கருவியாக அமைகிறது.**


| உடன்ஊழியரின் தகுதிகள் | தலையங்கம் ஊழியர்களும் & பணமும் | உடன் ஊழியரின் பணிகள் | கேள்வி பதில் | உங்களுக்கு தெரியுமா? |
|---|---|---|---|---|
| 2 | 3 | 4 | 7 | 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28,29; 2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19; 2 கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

தேவனுக்கு என்று ஜனங்கள் மகிமையாய் வேலை செய்யும்போது ஆவிக்குரிய மற்றும் உலகப்பிரகாரமான தேவைகள் சந்திக்கப்படும். நாம் பிறருக்குக் கொடுப்பதிலும், சேவை செய்வதிலும் தான் உண்மையான மகிழ்ச்சியும் ஆசீர்வாதமும் அடங்கியிருக்கிறது.

உங்கள் தலையை உயர்த்தி, உங்களை சுற்றி நடக்கும் காரியங்களை கவனித்து, நீங்களும் தேவனுக்கு விசுவாசமுள்ளவர்களாய், அவருடைய பணிவிடைக்காரர்களாய் மாறும்போது, தேவன் நம் தேவைகளை சந்திப்பார்.

# ஊழியக்காரருக்கு

## வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவிக்குரிய தகுதிகள்

(1 தீமோ 3 : 8-13 & அப்போ 6 : 3)

- பரிசுத்த ஆவியை பூரணமாய் பெற்றிருக்க வேண்டும்
- பொறுமையுள்ள மனம் உடையவராய் இருக்க வேண்டும்
- மதுபான பிரியனாய் இருக்கக்கூடாது
- வஞ்சனையற்றவராயும், உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்
- பண ஆசையில்லாதவராக இருக்க வேண்டும்
- விசுவாசத்தின் இரகசியத்தை காத்துக் கொள்ள வேண்டும்
- நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்
- குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்க வேண்டும்
- ஞானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்
- நல்லொழுக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்
- போதக சமர்த்தனாய் இருக்க வேண்டும்
- ஒரே மனைவியை உடையவனாக இருக்கவேண்டும் (பலதாரமணம்/ விபச்சாரம் தடை செய்யப்படுகிறது)
- ஊழியக்காரரின் மனைவியும் அவதூறு பண்ணாதவர்களாயும் தெளிந்த புத்தி உள்ளவர்களும், எல்லாவற்றிலும் உண்மை யுள்ளவர்களாயிருக்க வேண்டும்
- தன் சொந்த குடும்பத்தை நன்றாக நடத்துகிறவனாய் இருக்க வேண்டும்.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* www.thegospeltruth.org *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

இயேசு கிறிஸ்துவின் இரகசியமான ஊழியக்காரர்கள் எல்லா மனுஷரையும் எல்லாவற்றிலும் தயை பாராட்டுகிறவர்களாய் இருக்க வேண்டும். ஆகையால் மாம்சத்திற்கும், மதுபானத்திற்கும் அடிமைகளாயிராமல் தேவசபையின் பணிவிடைக்காரர்களாய் நல்லொழுக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
(டிராலியன்களுக்கு இத்தனேஸியஸ் எழுதின நிருபம் இரண்டாவது நூற்றாண்டு)

இந்த இதழில் உதவிக்காரரின் அலுவல்களை குறித்து பார்க்கலாம். இந்த உதவிக்காரரின் பணிகள் சரியாக புரிந்து கொள்ளப்பட்டு, அதற்கு ஏற்ப மாறும் போது சபையானது நல்ல ஒரு முன்மாதிரியான நிலையை அடையும். இந்த தலைப்பைக் குறித்து எழுதுவதற்காக பிரயாசப்பட்டபோது, நான் தெரிந்து கொண்ட விஷயம் என்னவென்றால் இது மிக கடினமான ஒன்று. பிரௌன் எழுதிய அப்போஸ்தல சபை என்கிற புத்தகத்தை நான் படித்தபோது இதே முடிவையே அவரும் குறிப்பிட்டிருந்தார். புதியஏற்பாட்டு சபையின் அனைத்து ஒழுங்கு முறைகளைக் காட்டிலும் மிகவும் கடினமான ஒரு ஒழுங்கு உதவிக்காரருடையது .

ஆகவே அநேக புத்தகங்களை திரும்பத் திரும்ப வாசித்து, வரலாற்று நிகழ்வுகளை அறிந்து கொண்ட பின்பே இதைக் குறித்து எழுதினேன். தேவசபையில் ஒழுங்கு முறைகளில் உதவிக்காரரின் பங்கு மிக முக்கியம். ஒவ்வொருவரும் கர்த்தருடைய பணிக்கென்று அழைக்கப்பட்டிருப்பதால், உதவிக்காரராயிருக்கிறவர்களும் சபைநிர்வாகத்தில் மிக முக்கியமானவர்கள். பொருளாளர் அல்லது நிர்வாக அறங்காவலர் ஆகியோரைக் காட்டிலும் மேலான ஆவிக்குரிய வழிகாட்டியாக இருக்கும்படியாக அழைக்கப்பட்டவர்களே இந்த உதவிக்காரர்கள். இது மாதிரியான சில பொறுப்புகளில் இருப்பவர்களே உறுதியாகவும் விடா முயற்சியோடும், உழைத்து சபையின் உலகப்பிரகாரமான தேவைகளை நிறைவேற்றுவதோடு, ஆவிக்குரிய வழிகாட்டிகளாகவும் இருக்கிறார்கள். வேதத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து ஒழுக்கங்களையும் சரியாகக் கடைபிடிப்பவரே உதவிக்காரர் (டீக்கன்).தேவசபையில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஊழியப் பொறுப்புகளும், டீக்கன் என்கிற பதவியும் இல்லை. தேவனுக்கு ஊழியம் செய்யவே அழைக்கப்பட்டுள்ளோம். சபையின் அதிகாரம், நிலைமை, அங்கீகாரம், உயரிய நிலை என்று எதுவுமில்லை. தாழ்மையும், கர்த்தருக்கு சேவை செய்யும் மனப்பான்மையுமே எல்லாவற்றிலும் உயர்ந்தது.
அப்போஸ்தலர்களின் நாட்கள் தொடங்கி மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபை அமைப்புகளில் விசுவாசத் துரோகத்தினிமித்தம் ஆவிக்குரிய ஒழுங்குகளில் கவனம் செலுத்தப்படாமல் போய்விட்டது. அதே போதனையும், ஒழுங்கும் இன்றுவரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சிலர் டீக்கன் என்பவர் நமது சபை பாரம்பரியத்தில் பதவி வகிக்கும் வயதான ஒருவர் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். இது சரிதான். ஊழியக்காரர் இல்லா விட்டாலும், டீக்கன் அவருடைய பதவியில் இருந்து கொண்டே தான் இருப்பார். அவர் ஊழியத்திற்கு எப்போது உதவியாக இருந்து கொண்டே இருப்பார். தாழ்மைக்கும், கர்த்தருக்குப பயப்படுதலுக்கும் முக்கியத்துவம் தருகிற முன்மாதிரிகளாக திகழவேண்டும். கர்த்தர் தாமே தேவசபையை ஆசீர்வதித்து, உதவிக்காரரின் நற்குணங்களை புரிந்து நடந்து கொள்ள உதவி செய்வாராக.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக

## ஊழியர்களும் பணமும்



எருசலேமிலே, இந்த சபையில் அப்போஸ்தலர்கள் சபையின் பொருளாதார நடவடிக்கை களை கையாள 7 பேரை நியமித்திருந்தார்கள். பகிர்ந்தளிக்கும் கொள்கையில் பாகுபாடு ஏற்படுவதாக புகார் எழுந்ததால் கிரேசியர்கள் காலம் வரை வந்தது. எதிரிகளின் கண்ணிகளில் விழுந்து விடாதபடிக்கு பொருளாதார காரியங்களில் ஊழியர்கள் விலகி இருப்பது நல்லது. இதிலிருந்து தங்களை விடுபட செய்வதால், ஊழியத்தை முழுமையாக கவனிக்க முடியும். சபை ஒழுங்குகளை கவனிக்க சபைக் கூட்டத்தில் விசுவாச மான ஒருவரை தேர்ந்தெடுத்து பொருளாதார காரியங்களை ஒப்படைக்கலாம்

# ஊழியக்காரர்/ உதவிக்காரர்

## ஊழிய பணிகள்

**கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை. அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும்,விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும்.**
**1 தீமோத்தேயு 3 : 1, 8**



**டீக்கன் என்கிற வார்த்தைக்கு உதவியாளர், பணியாளர், ஊழியர் வேலையாள் என பல பெயர்கள் உண்டு**

தேவனுடைய வார்த்தையை போதிக்கும் தேவனால் அழைக்கப்பட்ட தகுதியுள்ள வர்களே மூப்பர்களாகவும் கண்காணி களாவும் நியமிக்கப்படுகிறார்கள். மூப்பரும், உதவிக்காரரும் ஒன்றே என்பதற்கு பல சான்றுகளுண்டு. அதாவது விசுவாசத்துரோகத்தினிமித்தம் இது இரண்டும் வேறு வேறு என்று பிரிக்கப்படுவதற்கு முன்பு வரை இரண்டும் ஒன்றாகவே இருந்தது. இரண்டாவது ஊழியம் உதவிக்காரர் (டீக்கன்). மூப்பருக்கு உதவியாக, சபையின் உலகப்பிரகாரமான தேவைகளை சந்திக்க இருப்பவர். போதிப்பதைத் தவிர மற்ற எல்லா நல்லொழுக்கங்களையும் ஊழியரைப் போன்றே பெற்றிருக்க வேண்டும் ஆவிக்குரிய தகுதிதான் இதில் முக்கியம்.

**பொதுவான மேற்கோள்கள்**
உதவிக்காரருக்கான முழுமையான ஆலோசனைகள் நிர்வகிக்கும் முறைகள் கையாளப்பட வேண்டிய விஷயங்கள் என்று அனைத்தும் வேதத்தில் சொல்லப்படவில்லை என்றாலும் வேதத்தின் அடிப்படையிலான சத்தியங்களில் நிலைத்து, அதை சார்ந்து உதவிக்காரரின் வேலையை விட அவருடைய ஒழுக்கங்கள் முக்கியம். அப்போஸ்தலர் சபையில் பின்பற்றிய முறைமைகள் மாற்றப்படாமல், வேலை நிலைகளில் வேறுபாடு இல்லாமல் நிர்வாக சீர்திருத்தத்தோடு ஒவ்வொரு வருடைய ஒழுக்க முறைகளுக்கு மிகவும் கவனம் தேவை. சபையின் ஆவிக்குரிய மற்றும் உலக சம்பந்தமான காரியங்களை வரலாற்றோடு ஒப்பிட்டு பார்த்தும் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள சத்தியங்களை ஆராய்ந்து நிதானித்து நடப்போம்.

**வரையறை**
டீக்கன் என்கிற வார்த்தை கிரேக்க வார்த்தையான டயகனாஸ் அதாவது உதவியாளர், பணியாளர், ஊழியர் வேலையாள் என பல பெயர்கள் உண்டு (ஸ்டாங்ஸ் கையேடு / தாயர் கிரேக்க வரையறைகள்) டீக்கன்/ உதவியாளர் எனும் வார்த்தை புதிய ஏற்பாடு முழுவதும் ஏறத்தாழ 30 இடங்களில் வேறு வேறு விதமாக சொல்லப்பட்டுள்ளது. சில வசன ஆதாரங்களைக் குறிப்பிடுகிறேன். மத் 20 : 26 ல் உங்களில் எவனாகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால் அவனுக்கு பணிவிடைகாரனாயிருக்கக் கடவன் (டயாகனாஸ் / டீக்கன்) ரோமர் 13 : 4 அவன் நீதியை செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயி ருக்கிறான் (டீக்கன்). பவுல் கூறுகையில் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்த சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன் (எபேசியர் 3 : 7) .டீக்கன் என்பது ஊழியக்காரன் என்று பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் (மத் 23 : 11). ஒரு ராஜாவின் வேலையாட்கள், ஒரு ஹோட்டலில் பணிபுரியும் சர்வர்கள், இவர்களைப் போல டீக்கன்களும், உதவிக்காரர்களாக மத் 22: 13 மற்றும் யோவான் 2 : 9 அதிகாரங்களில் காணலாம். தெளிவாக உதவிக்காரர்கள் என்பவர்கள் ஊழியர்களுக்கு உதவியாக செயல்படுபவர்கள்.தேவனுடைய பரிசுத்த வான்கள் உதவிக்காரராக செயல்பட வேண்டும்.

**உதவிக்காரரின் பணிகள்**
கிறிஸ்துவின் காலங்களில் 62 ஆவது வருடங்களில் பவுல் அப்போஸ்தலர்

பிலிப்பி பட்டணத்திலுள்ள சபைகளுக்கு எழுதும்போது கிறிஸ்து இயேசுவுக் குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும் உதவிக்காரருக்கும்(டீக்கன்) பிலி 1 : 1 பவுல் குறிப்பாக இருவேறு பொறுப்பு களான கண்காணி மற்றும் உதவிக் காரரை குறிப்பிட்டிருக்கிறார்.ஆதி அப்போஸ்தல திருச்சபைகளில் இந்த வழக்கத்தை நாம் காணலாம். மீண்டும் 1 தீமோத்தேயு 3 ல் திரும்பவும் கண்காணியானவன் எப்படி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்க வேண்டும். ஆகவே அப்போஸ் தலருடைய நாட்களில் டீக்கன் / உதவிக்காரருக்கு இருந்த தனிப் பெரும் பொறுப்பை காணமுடிகிறது

**உதவிக்காரரின் சேவை**

அப்போஸ்தல சபைகளில் உதவிக்காரர் என்கிற ஒரு பணியைக் குறித்த பவுல் கூறியிருக்கிறார். உதவிக்காரரின் நோக்கம் என்ன? வேதாகமத்தின் அடிப்படையிலான சில உதாரணங்களைக் கொண்டு சேகரிக்கப்பட்ட விவரங்களில் முதன்மையான ஒன்று, தேவனுடைய அழைப்பு சுவிசேஷம் அறிவிப்பதற்கானது. ஏழைகளுக்கு உதவவும் தேவையுள்ளவர்களுக்கு ஊழியம் செய்யவுமே.கிறிஸ்து தம் சீஷர்களுக்கு கற்பித்தார்.

தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவர்களுடன் இருந்தார்கள் (லூக் 8 : 3). ஆகவே சபை என்று வரும்போது தேவைகளை சந்திப்பதற்காக பொருளாதாரத்தை கணக்கிட ஆள் தேவை. இந்த தைலத்தை 300 பணத்துக்கு விற்று தரித்திரருக்கு கொடாமல் போனதென்ன (யோவான் 12 : 4-6) என்று யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டு, அதிலே போடப்பட்டதை சுமக்கிறவனான படியால் இப்படி சொன்னான். தேவையானதை வாங்கவும், தரித்திரருக்கு கொடுக்கும்படியாகவும் பணப்பை யூதாசின் கையில் கொடுக்கப் பட்டிருந்தது (யோவான் 13 :29). பொதுவாக பணம் பொருளாதாரம் சம்பந்தமாக சபை நிர்வாகிகள் ஒருவர் தேவை என்பதை நமக்கு விளங்கச் செய்கிறது.

**ஊழியம் செய்ய தெரிந்தெடுத்தல்**

பெந்தெகோஸ்தே நாளுக்குப் பிறகு சீஷர்களின் தொகை மிகவும் பெருகிய காலக்கட்டத்தில் தேவ வசனத்தை போதிக்கிற ஊழியத்தையும், பொருளாதாரத்தையும் ஒருங்கே கவனிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போ 6 : 1 - 6 இல் உதவிக்காரர்களை நியமிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்பட வில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து; நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற



**ஊழியர்/ உதவிக்காரர்களின் அழைப்பு ஆவிக்கேற்றதும் சபையின் பணிவிடை ஊழியமும் ஆகும்.**

ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.
இந்த யோசனை சபையாரெல் லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு,
அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்.

எருசலேமிலே மிகவும் வேகமாக பெருகி வரும் சீஷர்களைக் கொண்ட சபையை நிர்வகிக்க பொருளாதார உக்கிராணத்துவம் கொடுக்கப்பட்ட ஏழு பேர் பந்தி விசாரிப்புக்காரர்களாகவும் உதவிக்காரர்களாகவும் ஏற்படுத்தப் பட்டார்கள். இவர்களே முதன்முதலில் ஏற்படுத்தப்பட்ட உதவிக்காரர்கள் (டீக்கன்) என்று முந்தைய எழுத்தாளர்களின் வார்த்தைகளில் பார்க்க முடிகிறது. (2வது நூற்றாண்டின் இரேனியஸ்) மேலும் லூக்கா எழுதின நிருபத்தில் 7 உதவிக்காரர்களை குறித்து ஒருபோதும் குறிப்பிடவில்லை. இதிலே வரலாற்றின் அடிப்படையில் வேறுபாடுகள் எழுகிறது.



**ஊழியக்காரர்களின் கடமைகள் உலகப்பிரகாரமானதாக நின்று விட்டது. ஆனால் ஒரு உதவிக்காரர் அதையும் தாண்டி ஊழியத்தில் வலது கையாக உறுதுணையாக நிற்க வேண்டும்.**

மேலும் சபை வளர்ந்து பெரிய காலகட்டம் அது அப்போ 6ம் அதிகாரத்தில், சபை வளர்ந்து வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு உதவிக்காரர்கள் நியமிக்கப்பட்டதால் அவர்களுடைய குணாதிசயங்களைக் குறித்து 1 தீமோத்தேயுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

**கடமையும் பொறுப்புகளும்**

மிகவும் சுருக்கமாக, உதவிக்காரர்கள் ஆவிக்குரிய அழைப்பு மற்றும் தகுதியான தேவ ஊழியத்தை நிறைவேற்றுபவர்கள். வரலாற்று ஆய்வாளர் மற்றும் இறையியலாளர் ஆடம் கிளார்க் இந்த உதவிக்காரர்களைக் குறித்து அப்பம், இரசம், பந்தி விசாரிப்பில் சேவை செய்யவும், சபை ஆராதனை நேர ஒழுங்குகளை அறிவிக்கவும், விதவைகள், அனாதைகள், சிறைப்பட்டோர், வியாதியஸ்தர் ஆகியோரை ஆதரிக்கவும்... ஏழைகளுக்கு உதவி செய்து அவர்களை போதிக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள் (ஆடம் கிளார்க் வர்ணனை, மத் 20.26) .

**உலகப்பிரகாரமான காரியங்களில் உக்கிராணத்துவம்**

உதவிக்காரர்களின் தலையாய கடமை சபையின் உக்கிராணத்துவ பொறுப்பை சரிவர செய்வது. பண்டையகால யூதர்களின் ஜெப ஆலயங்களில் ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு என்று மூன்று நபர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு இருப்பர். இதனை கருத்தில் கொண்டு கூட அப்போஸ் தலர்களின் சபையில் உதவிக்காரர்களை நியமித்து இருக்கலாம். ஏனெனில் இவர்களுடைய பணியும் ஒன்றே (வேதத்தின் குறிப்புகள் அப்போ 6, ஆல்பர்ட் பர்னஸ்)

ஆரம்பத்தில் 7 பேருக்கும் பந்தி விசாரணையை கவனிக்கவும், ஆதரவற்றவர்களுக்கு உதவும் படியான பொறுப்புகள் கொடுக்கப்பட்டு இருந்தது அவ்வாறே கொடுக்கப்பட்ட உதவிக்காரரின் பணிகள் பல கிறிஸ்தவ பாகுபாட்டுப் பிரிவினைகளால் மாம்சீகமான வழியில் இந்தப் பதவி மாற்றம் அடைந்தது. சகோ.எட் வில்சன், தேவ சபை மூப்பர் எழுதுகிறார் : பகுக்கப்பட்ட வேலைகளுக்கென்று வகுக்கப்பட்ட பதவிகள் என்று ஒன்றுமில்லை. ஆவிக்குரிய மற்றும் மாம்சீக காரியங்கள் எந்த ஒரு குழப்பமும் இன்றி சுதந்திரமாக சுத்த இருதயத்தோடும் சேவை மனப்பான்மையோடு செவ்வனே செய்து முடிக்கப்பட வேண்டும். அதே சமயம் மற்ற பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக் கையுடனும், உள்ளுணர்வை பாதிக்காதவாறு வேதத்தின் சத்தியங்களை மனதில் கொண்டு ஒழுங்குமுறைகளை செயல்படுத்த வேண்டும். உதவிக்காரரின் பணிகள் சேவை சம்பந்த மானது. உலகப் பிரகாரமாக வாரந்தோறும் சபையில் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளான (ஆலய வசதிகள் ஒழுங்கு செய்வது, வாயிற்காவலர் பணி,ஒலி ஒளி அமைப்புகள் சரிசெய்தல்) இன்னும் பல... வழக்கமாக இந்த பணிகளை சபை உறுப்பினர்களே மேற்கொண்டாலும் ஊழியர்களின் (போதகர்) ஆலோசனைக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டிய கட்டாயத்திற்குள் வந்துவிட்டது .ஊழியக்காரர்களும் சபையாரோடு கலந்து ஆலோசித்து, காணிக்கைகள் வரவு, செலவு, ஊழிய உதவி, தொண்டு செய்தல் போன்ற காரியங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். நேர்மையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். பல சபைகளும், ஊழியர்களும் உதவிக்காரர்கள் நம்பகத் தன்மையற்றவர்களாயிருப்பதினிமித்தம் பாதிக்கப்பட்டுள்ளனர்

**ஊழியத்தில் உதவி**

அப்போ 6 ல் அப்போஸ்தல ஊழியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 பேர் சபையாரால் தீர்மானிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களால் உறுதிப்படுத்தப்பட்டு, அவர்களுடைய கடமைகளினின்று கொஞ்சம் தளர்வு உண்டாக்கப்பட்டது. வரலாற்றிலே உதவிக்காரர் களின் கடமைகள் உலகப்பிரகாரமானதாக நின்று விட்டது. ஆனால் ஒரு உதவிக்காரர் அதையும் தாண்டி ஊழியத்தில் வலது கையாக உறுதுணையாக நிற்க வேண்டும்.

**விசுவாசமுள்ள ஆவிக்குரிய வழிகாட்டி**

அவர்களுடைய ஆவிக்குரிய தகுதிகளும், நம்பகத்தன்மையும் ஒரு உதவிக்காரரை ஆவிக்குரிய வழிகாட்டியாக மாற்றுகிறது. போதகர் இல்லாத சமயங்களில் அவருக்கு பதிலாக போதிக்கலாம். தேவைப்பட்டால் கூட்டங்களை ஒழுங்கு செய்து நடத்தலாம் . சபைக்கும் மூப்பர்களுக்கும் பாலமாக இவர்கள் செயல்படலாம். ஆடம் கிளார்க் எப்போதாவது இவர்கள் போதிக்கலாம் என்கின்றார். அப்போஸ்தலர் நடபடிகளில் ஸ்தேவானும் பிலிப்பும் போதித்தது போல உதவிக்காரர்கள் போதிக்கலாம். மூப்பர்கள் சத்தியத்தையும் பரிசுத்தத்தையும் போதிப்பதற்கு பொறுப்புள்ள வர்கள் போல, ஊழியர்கள் இல்லாத சபைக் கூட்டத்தாருக்கு ஒரு துணையாக உதவிக்காரர் நிற்கலாம். பல கிறிஸ்தவ பாகுபாடுகள் எழும்பியபின் உதவிக்காரர்களின் பணி கறை படியத் தொடங்கிவிட்டது. முந்தைய நாட்களில் சபைகளில் ஆரம்ப நாட்களில் திருவிருந்து கொடுக்க உதவிக்காரர்கள் அனுமதிக்கப்படு வதில்லை. ஆனால் சில சமயம் ஊழியர் இல்லாத போது ஞானஸ்நானத்தில் உதவ அதிகாரம் இருந்தது. அனேக பரிசுத்தவான்க ளுக்குள்ளே உதவிக்காரர்கள் கேட்டுக் கொண்டால், அவர்களுக்கு உதவியாக ஞானஸ்நான நேரத்தில் உதவலாம். திருவிருந்து கொடுப்பதில் உதவவும் செய்யலாம். ஊழியர்களின் பிரதான கடமை இவைதான். ஆனாலும் உதவிக்காரர்களை (டீக்கன்) தேவைப்பட்டால் அழைக்கலாம். சேவை வாழ்வில் சுவிசேஷத்திற்கென்றே அழைக்கப் பட்டு தம் நேரத்தை செலவிடுகிறவர்கள் அநேக பரிசுத்தவான்கள். ஆனாலும் உதவிக்காரர்கள் சிறப்பு அழைப்பை பெற்று கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கம் வகிப்பவர்கள் பதவிக்காகவும் கௌரவத்திற்காகவும் அல்ல. தியாக மனப்பான்மையோடு கர்த்தருக்குப் பிரியமான சேவை செய்வதே வலியுறுத்தப் படுகிறது. நம்பகமான சேவை செய்யும் ஒரு உதவிக்காரரை கொண்ட ஊழியமும் தேவ சபையும் பாக்கியம் பெற்றது

# கேள்விக்கு என்ன பதில்?

**நிர்வாக அறங்காவலரும் உதவிக் காரருக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?**
நிர்வாக அறங்காவலருக்கென்று தனிப்பட்ட விதத்தில் பொறுப்புகள் எதுவும் வேதாகமத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. ஆனால் நிர்வாக அறங்காவலர் நல்லவராக இருப்பது அவசியம். பல நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப சபை அங்கீகாரம் பெறும் பொருட்டு அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி அதன் அடிப்படையில் உறுப்பினர்களை நியமித்து நிர்வாக அறங்காவலர் பொறுப்பை ஏற்படுத்தி சபையில் சொத்துக்கள், கரண்ட் பில் போன்ற பணிகளை நிர்வாகம் செய்வது சபையில் பொருளாதாரத்தை மேற்பார்வையிடுவது சட்ட நடவடிக்கை சார்ந்து செய்ய வேண்டிய காரியங்களை இவர்கள் பொறுப்பு. ஆகவே அறக்கட்டளை நிர்வாகிகள் நேர்மையுடன் சிறப்பாக பணியாற்ற வேண்டும்.

உதவிக்காரர் (டீக்கன்) வேலையை சிலவேளைகளில் நிர்வாக அறங்காவலர் மேற்கொள்வார். இரண்டு பேருக்கும் பணிகள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள தகுதிகள், ஆவிக்குரிய தகுதிகள், நிறையப்பெற்ற ஒருவரே சபையில் உதவிக்காரராக பணியாற்ற முடியும். 1 தீமோ 3 ல் சொல்லப்பட்டுள்ள குணாதிசயங்களை நிச்சயமாக ஒரு டீக்கனுக்கு தேவை. அதேசமயம் நிர்வாக அறங்காவலரும் அந்த சபை எடுக்கும் சட்டரீதியான ஒழுங்குகளுக்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டும்.

சகோ எட் வில்சன் கூறுகையில் வேதாகமம் உதவிக்காரரின் தகுதிகளை கொடுத்திருக்கிறது சட்டம் அறங்காவலருக்கான தகுதிகளையும் கொடுத்திருக்கிறது. சில சபைகளில் உதவிக்காரரின் ஒழுக்கங்கள் அறங்காவலருக்கும் பொருந்தும். சில நாடுகளின் அரசாங்கங்கள் வழக்கறிஞர், ஆசிரியர் போன்று சபை என்றால் அறங்காவலர் தேவை என்கிறது. அதுபோன்ற சமயங்களில் ஆவிக்குரிய மற்றும் சட்டரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் வேறுபடுத்தப்படலாம் இன்னொரு புத்தக ஆசிரியர் இவ்வாறாக கூறுகிறார். உதவிக்காரர் ஏழைகளின் தேவைகள் சந்திக்கப்பட உதவ வேண்டும் அறங்காவலர் சபை சொத்துக்களை பராமரித்துக் கொள்ள வேண்டும்.

**உதவிக்காரர் (டீக்கன் ) அபிஷேகிக்கப்பட வேண்டுமா?**
அபிஷேகித்தல் என்பது புதிய ஏற்பாட்டு சபைகளில் ஊழியர்களால் பின்பற்றப்பட்டிருந்த ஒரு ஒழுங்கு (பார்க்க காஸ்பெல் ட்ரூத் -33) அப்போஸ்தலர் 6 ல் ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அப்போஸ்தலர்கள் அவர்களுடைய தலையின் மேல் கையை வைத்து அவர்களுக்காக ஜெபித்தார்கள். சில இறையியலாளர்கள் இதனை முறையான அபிஷேகித்தலா அல்லது அவர்கள் செய்யப் போகிற வேலைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு செயலா என்பது போன்று பல கருத்துக்களை தெரிவிக்கின்றனர். சகோ.ஆஸ்டிஸ் வில்சன் கூறுகையில், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட இந்த ஏழு மனுஷர்கள் சபையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு



அப்போஸ்தலர்களால் அபிஷேகிக்கப்பட்டு, தாங்கள் செய்யவிருக்கும் பணிகளுக்கு (டீக்கன்) விசுவாசத்தினாலும், ஞானத்தின் ஆவியினாலும் நிறையப் பெற்றிருந்தார்கள்.

உதவிக்காரர் (டீக்கன்) பொறுப்பு என்பது வரலாற்று ரீதியாக மிக நீண்ட நடைமுறையாக இருந்தது. அபிஷேகித்தலே ஒரு மனிதன் கர்த்தரால் அழைக்கப்பட்டதை உறுதிப்படுத்திக் கொள்ளும் நடைமுறை. அதினிமித்தமே தொடர்ந்து சபை சார்ந்த உலகப்பிரகாரமான காரியங்களிலும் சபைக்கு சேவகர்களாக அவர்கள் திகழ முடியும். யாரை நியமித்தால் சபை பிரச்சினை இல்லாமல் செல்லும் என்று தேவனுடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியும்.உங்களுக்கு தெரியும்
(சகோ. எட் வில்சன் 2020)
**ரிகில்** (தேவசபையில் முன்னோடியான ஊழியர்) எழுதியதாவது : ஒவ்வொரு சபையிலும்... கர்த்தர் ஒரு மனுஷனை முன் குறித்து ஆவியானவரால் தகுதிப்படுத்தி, ஊழியராகவும் கண்காணியாகவும் ஏற்படுத்துகிறார். மற்றவர்களை உதவிக்காரர் (டீக்கன்) என்ற சேவைக்கு அவர் அழைக்கிறார். அவருக்கு சித்தமானவர்களை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்க்கிறார். அந்த சபையின் ஊழிய தேவைகளைப் பொறுத்து, ஆதி அப்போஸ்தலர்களும், மூப்பர்களும் செய்தது போல கர்த்தருடைய அழைப்பை உறுதிப்படுத்தவே அபிஷேகித்தல் நடைபெறுகிறது. சபையின் உலகப் பிரகாரமான தற்காலிக விவகாரங்களை பார்த்துக் கொள்ளவே உதவிக்காரர் / டீக்கன் நியமிக்கப்படுகிறார் (கிறிஸ்தவ சபை 1912).

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

உங்களுக்குத் தெரியுமா?

செப்பர்டு ஆப் ஹெர்மனஸ் இயேசு கிறிஸ்துவின் ஆண்டு 150 சிதைந்துபோன உதவி காரரின் பணிகளைக் குறித்து எழுதியதாவது டீகன் என்கிற பதவியில் உள்ளவர்கள் விதவைகள், அனாதைகள் மற்றும் 7–வது வாழ்வாதாரத்தை மிகவும் மோசமாகும் வகையில் அவர்களை வைத்துதான் கொள்ளை லாபம் சம்பாதித்து தங்களுக்கு சேர்த்துக் கொண்டு இவர்கள் வேலையை மோசம் போக்கிக் கொண்டார்கள்

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## ஞானமுள்ள ஒரு ஏழை

இயேசு தம்மை பின்பற்றியவர்களை தாழ்மையை தரித்தவர்கள் சேவை மனப்பான்மையுடன் இருந்து எளிமையான வாழ்வை நாடவே விரும்புகிறார். இந்த மத சம்பந்தமான உலகில் பதவி அங்கீகாரம் புகழ் இவைகளை நாடுகள் மத்தியில் எருசலேமின் ராஜா ஒருவர் ஏழ்மையின் கதையைச் சொல்கிறார் கேளுங்கள்.



ஒரு சிறு பட்டணம் இருந்தது, அதிலே இருந்த குடிகள் கொஞ்ச மனிதர், அதற்கு விரோதமாய் ஒரு பெரிய ராஜா வந்து, அதை வளைந்துகொண்டு, அதற்கு எதிராகப் பெரிய கொத்தளங்களைக் கட்டினான்.அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான், அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான், ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை. ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற்போனாலும், பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்.மூடரை ஆளும் அதிபதியின் கூக்குரலைப்பார்க்கிலும் ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத்தக்கவைகள்.பிரசங்கி 9 : 14 – 17

ஆம் நமக்குள் அனேக ஞானம் உள்ள ஏழைகள் உண்டு. யுத்தங்களின் வெற்றியும் பிரச்சனையும் தீர்வும் எப்போதும் மனம் வருந்தி அங்கீகாரம் உடைய பல செயல்கள் மூலம் சேர்க்கப்படுவதில்லை. ஞானம் அமைதி நிலை காணப்படுகிறது என அசட்டை பண்ணப்பட்டு அவர் வார்த்தைகளை கேட்காமல் போனாலும் பட்டணத்தை தேவையாயிருந்தது. அதற்காக அந்த ஏழையான மனிதர் ஹீரோவாக அறிவிக்கவில்லை, பாராட்டுகள் வழங்கப்படவில்லை, கொண்டாட்டங்கள் ஏற்படுத்தவில்லை, வாழ்த்து விளம்பரப் பலகைளோ, போஸ்டர்களோ ஒட்டவும் இல்லை, சிலை எதுவும் அவருக்கு நிறுவப் படவில்லை. அந்த படம் அவரை நினைவு கூறவில்லை, மாறாக அந்த மனிதனை மறந்து போனது.

அடிக்கடி சபையில் கர்த்தருடைய பலத்த செய்கைகளில் வெற்றி ஏழையான ஞானமுள்ள புருஷர் மற்றும் ஸ்தீரிகளினிமித்தமே ஏற்படுகிறது. அவர்களுடைய வேலைக்கு எந்த ரசிகர் கூட்டமும் இல்லை. அவர்களுடைய சேவை, ஞானம், உண்மைக்கு வெகுவாகப் பாராட்டப்படுவதே இல்லை. அதற்கான அங்கீகாரமும் அவர்களுக்கு கிடைப்பதே இல்லை. ஆனால் அவர்களுடைய ஞானமுள்ள சேவை தொடராவிட்டால், பட்டணத்தின் அழிவு சமீபமாயிருக்கும். அவர்களுடைய சேவையும், ஞானமும் மக்களுக்கு முன்பதாக வெளிச்சம் போட்டு காண்பிக்கப்படாவிட்டாலும், தங்களுடைய வறுமையிலும், தங்கள் ஞானத்தை உபயோகப்படுத்தி சரியான நேரத்திற்கு உதவுபவர்கள், ஒவ்வொரு தேவபிள்ளையும் புகழுக்காகவும், ஆடம்பரத்திற்காகவும் நாடாமல், வறமையிலும் தங்கள் எஜமானுக்கு உண்மை உள்ளவர்களாயும், அமரிக்கையான ஞானத்திலும், பெலத்திலும் ஜனங்களுக்கு சேவை செய்யவும் விழைவோம்.

எங்களுக்குள் இருக்கும் ஏழ்மையான ஞானமுள்ள புருஷர் மற்றும் ஸ்திரீகளுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். அவர்களுடைய அன்பு, இரக்கம், ஞானம் மற்றும் சேவையை பாராட்டுகிறோம். நாங்கள் உங்களை நேசிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

CONTACT :-

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi-Taluk - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with us on Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.

Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316